1979 நவம்பர் 2]

சத்தியமங்கலம் வனச் சரகத்தில் சந்தன மரங்கள் ஏலம்

* வினா எண். 66—திரு. கு. ரமணி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் வனச் சரகம் மலைகளில் சந்தன மரம் இவ்வருடம் ஏலம் விட்ட தொகை மிகவும் குறைவென்று அரசுக்கு செய்தி வந்துள்ளதா?

(ஆ) ஏலத்தில் மொத்தம் இவ்வருடம் கிடைத்துள்ள தொகை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) ரூபாய் 384.10 இலட்சம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் வனச்சரகத்தில் ஏராளமான சந்தன மரங்கள் இருக்கின்றன. இந்த மரங்களை வருஷா வருஷம் குறைந்த விலைக்கு ஏலத்திற்கு விடப்படுகின்றன என்றும் சில அதிகாரிகளின் தவறான போக்கினால்தான் இந்த நிலை ஏற்பட்டு வருகிறது என்றும் தெரியவருகிறது. இதில் உண்மை உண்டா? அரசு இதை கண் காணிப்பதற்கு சரியான முறையில், அதிகப்படியான தொகையில் அந்த மரங்களை ஏலம் விடுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சந்தன மரங்களை ஏலத்தில் விடுவதில் இரண்டு ஆண்டுகளாக என்ன நடை பெறுகின்றன என்பது எனக்குத் தெரியும். அதற்கு முன்பு என்ன நடை பெற்றது என்பதை என்னால் சொல்ல முடியாது. இரண்டு ஆண்டுகளாக அதிகாரிகளோ அல்லது வேறு யாருமோ இவ்வாறு செய்வதாக எனக்கு எந்தவிதமான தகவலும் இல்லை. அதற்கு அடிப்படை ஆதாரங்களும் இல்லை. ஆனால் சந்தன மரங்களின் விலைகளில் ஏற்றத்தாழ்வு இருப் பதற்கு காரணம் இண்டர்நேஷனல் மார்க்கெட்டில், உலக சந்தையிலே வாங்கு பவர்கள் நிர்ணயிக்கிற விலையைப் பொறுத்துத்தான், இங்கே இருப்பவர்கள் விலை கொடுத்து வாங்குகிறார்கள். இதனால்தான் விலைகளில் ஏற்ற இறக்கம் ஏற்படுகிறது.

[1979 நவம்பர் 2

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்களை, நல்ல தரமான சந்தன மரங்களை வெளிநாடுகளுக்கு அனுப்புகிற ஒரு நிலைமைக்கு மத்திய அரசு ஏதாவது தடை விதித்திருக்கிறதா ? அல்லது மத்திய அரசின் அனுமதி பெற்றுத்தான் சந்தன மரங்களை வெளி நாடு களுக்கு அனுப்ப வேண்டும் என்ற நிலை இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கேட்ட கேள்வியிலேயே ஒரு பகுதியாக இந்த கேள்வியும் அமைந்து இருக்கிறது. நான் விலைகளிலே ஏற்ற இறக்கம் எப்படி ஏற்படுகிறது என்று தெரிவித்தேன். கடந்த ஆண்டிலே ஏன் சில அரசுக்கு வருவாய் குறைந்தது என்பதற்கு முக்கிய காரணம், மத்திய அரசு திடீரென்று சில முக்கியமான சந்தன மரங்களுக்கு, உயர்ந்த ரக மரங்களுக்கு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று தடை போட்டதுதான். சில உயர்ந்த ரக சந்தனக் கட்டைகளை ஏற்றுமதி செய்யக் கூடாது என்ற நிலைமையை ஏற்படுத்தி விட்டார்கள்.

இந்தியாவிலேயே நல்ல சந்தன மரங்கள் விளைகின்ற காடுகள் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பெறுகிறது. நாம்தான் அதிக அளவில் ஏற்றுமதி செய்கிறோம். வருடம் ஒன்றுக்கு 1,500 டன் சந்தன மரங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு நமக்கு இருக்கிறது. அதில் 700, 800, சில நேரங்களில் 1,000 டன் வரை விலைக்குப் போகிறது. இப்போது டன் ஒன்றுக்கு ரூ. 7,000 அளவுக்கு விலைக்குப் போகின்ற உயர்ந்த சந்தன கட்டைகளை ஏற்றுமதி செய்யக் கூடாது என்று நமக்கு தெரியாமலேயே மத்திய அரசு தடை விதித் திருக்கிறது. இதன் காரணமாக ஏறத்தாழ மூன்று கோடி ரூபாய் வருமானம் நமக்கு குறைந்திருக்கிறது. இதைப்பற்றி மத்திய சர்க்காரின் வணிகத் துறைக்கு எழுதினோம். அவர்கள் இது தங்களிடத்தில் இல்லை என்றும், விவசாயத் துறை அமைச்சருக்கு எழுதவேண்டும் என்று தெரிவித்தார்கள். அதன்படி அவர்களுக்கும் எழுதியிருக்கிறோம். அடுத்த டிசம்பர் ஏலத்திற்குள் மத்திய அரசு இந்தத் தடையை நீக்கிவிடும் என்று எதிர்பார்க்கிறோம்.

(முற்பகல் 9-20)

திரு. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, சத்திய மங்கலம் வனசரகத்தில் சென்ற ஆண்டு சந்தன மரங்களின் உற்பத்தி எவ்வளவு டன் ? அதே மாதிரி முன்பு உற்பத்தி எவ்வளவு டன் ? இந்த ஆண்டு எவ்வளவு டன்? தற்போது உற்பத்தி கூடுதலாகியிருக்கிறதா ? அல்லது குறைந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 நவம்பர் 2]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, சந்தன மரங்களை உற்பத்தி என்கின்ற அளவில் கணக்கிடுவதில்லை. விற்பனைக்கு என்று எடுக்கின்ற—அதாவது டெட் ட்ரீஸ்—தானாகவே காய்ந்து விழுகின்ற சந்தன மரங்களை பொறுக்கி எடுத்து விற்பனை செய்து வருகிறோம். திருப்பத்தூர் பகுதி, சேலம் பகுதி, சத்தியமங்கலம் பகுதி இவைகளில் எல்லாம் இருந்து ஆண்டு ஒன்றுக்கு 1,500 டன் சேகரிக்கப்படுகிறது என்பது தான் இருக்கின்ற தகவல்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் பகுதியில் விலையுயர்ந்த சந்தன மரங்கள் கிடைக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். மாநில அளவில் அதிகமான சந்தன மரங்கள் இங்கே கிடைக்கிறது. ஆகவே அங்கே ஒரு சந்தனத் தொழிற்சாலை அரசின் சார்பில் அமைக்கும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சந்தனமரத்தின் ஏலத்தைப்பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிற்சாலைப்பற்றி கேட்கிறார்கள். இருந்தாலும் இருக்கின்ற விவரங்களை சொல்லுகிறேன். சந்தன எண்ணெய் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்பது அரசின் திட்டம். மத்திய அரசின் குறுக்கீடுகள் இருந்த காரணத்தால் ஓராண்டு தள்ளிப் போய்விட்டது. ஆகவே இதை குடிசைத் தொழிலாக அதாவது 10, 15 லட்சம் ரூபாய் செலவில் சந்தன எண்ணெய் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று அரசு திட்டமிட்டிருக்கிறது. முதல் தொழிற்சாலை திருப்பத்தூர் பகுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. சந்தன மரங்கள் கிடைக்கின்ற மற்ற பகுதிகளிலும் இதுபோன்ற தொழிற் சாலைகளை ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த சந்தன மரங்கள் திருட்டுப் போவது சம்பந்தமாக இதே அவையில் முன்பு நான் விவரங்களோடு விஷயங்களை தெரிவித்திருக்கிறேன். திருட்டு அதிகமாக இருந்து கொண் டிருப்பதின் காரணமாக சர்க்காருக்கு வருமானம் குறைகிறது. அத்துடன் இப்போது சந்தன மரங்களின் மூலம் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசு முடிவு எடுத்திருப்பதால், நமது காடுகளிலுள்ள சகல சந்தன மரங்களுக்கும் நம்பர் போட்டு அவற்றை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதன் தொடர்பாக ஒரு அடிப்படைக் கருத்தை நான் தெரிவிக்க விரும்பு கிறேன். சந்தன மரம் மட்டுமல்ல, வனத் துறையிலுள்ள எல்லா மரங் களும் விலை மதிப்புள்ள செல்வங்கள். இந்த வனச் செல்வங்கள் அனைத் தையும் பாதுகாக்க வேண்டும். இந்தத் துறை வியாபாரத்துறையின் அடிப் படையில், வருமானம் அடிப்படையில் இந்தத் துறை இதுவரை கருதிவரப் படவில்லை. ஒதுக்கப்பட்ட துறையாகவே கருதப்பட்டு, குறைந்த பணி யாளர்கள் உள்ள ஒரு துறையாகவே இருந்து வந்திருக்கிறது. இருக்கின்ற மரங்களை பாதுகாக்க முயற்சி எடுக்கவேண்டும் என்று நீங்கள் சொல்லு கிறீர்கள், இப்போதுள்ள நிலைமையில் சந்தனத்திருட்டு நடைபெறாமல் பாதுகாக்க குறைந்தஅளவு 150, 200 அதிகாரிகளை போட்டாகவேண்டும். அதற்கும் மேலாக கேரளா, கர்நாடக மாநில எல்லைப்பகுதிகளில் உள்ளே தள்ளியிருக்கின்ற பகுதிகளில் இருக்கின்ற மரங்களை எல்லாம் பாதுகாத்தாக வேண்டும். உள்ளே நுழைய முடியாத அளவுக்கு அடர்ந்த காடுகளில் ஏராள மான விலை மதிப்புள்ள சந்தனமரங்கள் இருக்கின்றன. வெளிமாநிலங்களில் உள்ள இதையே தொழிலாக வைத்திருக்கின்ற பலர் இந்தக் காடுகளில் நுழைந்து விடுகிறார்கள். ஆகவே இதை பாதுகாத்துக் கொள்வதற்காக அதிகமான பணியாளர்கள், அலுவலர்கள் வேண்டும் என்று நிதித்துறையிடம் அனுமதி தருமாறு கேட்டிருக்கிறோம். பாதுகாப்பாளர்களை இன்னும் அதிகமாக இந்த ஆண்டு போடவேண்டியிருக்கிறது. இந்தக் கோரிக்கையை நிதித்துறை பரிவோடு கவனித்துக்கொண்டிருக்கிறது. இதற்கான முடிவு ஏற்பட்டவுடன் அதிகமான அலுவலர்களை போட்டு, இந்த வனச்செல்வங்களை பாதுகாப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்பட்டு ஊராட்சியில் மேல்நிலை குடிநீர்த்தொட்டி அமைத்தல்

* வினா எண். 67—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் காணை ஊராட்சி ஒன்றியம் கல்பட்டு ஊராட்சி மன்றத்தில் குடிநீர் வழங்க மேல்நிலைத் தொட்டி கட்டி பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்க அரசு திட்டம் தீட்டியுள்ளதா ?

(ஆ) ஆமெனில், எப்போது அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) திட்டம் எதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.